1972 ஆகஸ்ட் 25]

பழனியில் செவிடர்கள் பள்ளி

*355. வினா.—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தேவஸ்தானத்தின் சார்பாக அண்மையில் பழனியில் "செவிடர்கள்" பள்ளி ஒன்று துவக்கப்பட்டுள்ளதா—

(இ) ஆம் எனில், அதற்காகும் செலவுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : (அ) ஆம். 14—2—1972-ம் நாள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

(இ) ஆண்டுக்கு ரூ. 14,400 ஆகும்.

திரு என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, அந்தப் பள்ளியால் எத்தனை பேர்கள் இது வரையில் பயன் அடைந்து இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : அந்தப் பள்ளி தொடங்கப்பட்டு சரியாக 7 மாத காலம் முடிவடைந்து இருக்கிறது. இது வரையில் 20 மாணவர்கள் அந்தப் பள்ளியில் சேர்ந்து பயன் பெற்று வருகிறார்கள்.

திரு சொ. காவேரிமணியம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த மாவட்டத்தில் துவங்கப்பட்டது போல மதுரை மாவட்டத்தில் இருக்கக் கூடிய தேவஸ்தானங்களிலும் இம்மாதிரியான செவிடர்களுக்கான விடுதிகள், அல்லது அனாதைக் குழந்தைகளுக்கான விடுதிகள் தொடங்கப் பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். வேறு தேவஸ்தானங் களிலும் தொடங்கப்பட்டிருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : மதுரை மாவட்டத்தில் எந்தக் கோவில்களில் உபரி நிதி இருக்கிறதோ அங்கே இருக்கிற அறங்காவலர்கள் அதைப்பற்றி தீர்மானித்தார்களேயானால் அரசு அதைப் பரிசீலிக்கும். இப்பொழுது வேறு எந்தக் கோவில்களின் நிதியிலிருந்து இம்மாதிரி விடுதிகளைத் திறந்திருக்கிறோம் என்ற விவரம் என்னிடம் இல்லை.

வெள்ளிக் குறியிடாத வினாக்கள்

Repatriates from Ceylon

1. *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Harijan Welfare be plaesed to state—

(*a*) Whether the Hon. Chief Minister has received a petition dated 21st August 1972 from the Ceylon Repatriates Society, 10, Jothi Ramalingaswamy Street, West Mambalam, Madras-33 ; and

(*b*) If so, the details thereof ?